# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1377/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பஞ்சவர்ணம் | க-பெ | முத்துகுமார் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 44/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | மேற்பார்வையாளர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.07.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

----------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து மேற்பார்வையாளராக தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 06.08.2019 அன்று எனது தாயார் பெரியநாயகி என்பவர் வீட்டில் இருந்து கிளம்பி காரைக்குடி புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள டீக்கடைக்கு டீ குடிப்பதற்காக விடியற்காலை 4.45-5.00 மணியளவில் சென்றுவிட்டு திரும்பி வரும்போது பேருந்து நிலையத்தின் பின்புறமாக உள்ள சாலையில் வந்து கொண்டிருந்தபோது எஸ்ஆர்எஸ் பேருந்து பின்புறமாக மோதி எனது தலையின் பின்னந்தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டதாக எனது தம்பி கணேசனுக்கு தெரிந்த நபர் ஒருவர் அவருக்கு தகவல் சொல்லியுள்ளார். மேற்படி தகவலை எனது தம்பி என்னிடம் சொன்னார். மேலும் சிகிச்சைக்காக அவர் காரைக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். அதன் அடிப்படையில் நானும் எனது தம்பியும் அங்கு சென்று பார்த்தபோது தலையில் இரத்தம் வலிந்து கொண்டிருந்ததால் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள் பரிந்துரை செய்தார்கள். அங்கு சென்று சிகிச்சையில் சேர்ந்த போது மருத்துவர்கள் எனது தாயார் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாக சொன்னார்கள். பின்னர் மீண்டும் வரை மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். நான்கு நாட்கள் சிகிச்சையில் இருந்த எனது தாயார் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டார். 07.08.2019 அன்று எனது தாயார் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்குமாறு நான் புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1**.

**<u>குறுக்கு விசாரணை</u>**

புகாரை எழுதியது யார் என்றால் நான் தான் எழுதினேன். புகாரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகாரில் எனது தாயார் சம்பவ நேரமான 5.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு

காலி பாட்டில் எடுப்பதற்காக சென்றுள்ளதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் டீ சாப்பிடுவதற்காக சென்றார் பாட்டில்களை எடுத்து வருவது வழக்கம். சம்பவத்தை நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவ குறித்து எனக்கு தகவல் சொன்னது யார் என்றால் எனது தம்பின் நண்பர் முத்துராமன். சம்பவத்தின் போது எனது தாயாருக்கு எத்தனை வயது என்றால் 60 வயது. சம்பவத்திற்கு சில தினங்களுக்கு முன்பு எனது தாயாருக்கு கண்அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நேரம் விடியற்காலை 5.00 மணி என்றால் சரிதான். கண்ணத்தாள், ஜெயா, கணேசன் ஆகியோர்கள் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள நபர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் நான் இல்லாததால் சம்பவத்தில் ஈடுபட்ட நபரை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் எங்களிடம் காட்டினார்கள். போலீசார் சொன்னதன் பின்பு தான் எதிரியை தெரியும் என்றால் சரிதான். இறந்த நபர் எனது தாயார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.09 12:04:55 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.